

# உள்ளூர் சிறு வியாபாரிகளுக்கு வங்கிகள் கடனுதவி வழங்க வேண்டும்

## வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கோரிக்கை



கடலூர்

## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கூட்டம்

### விக்கிரமராஜா பங்கேற்பு



Newly elected Tamil Nadu Traders Association Cuddalore Town president and GRK Groups Chairman Thambu alias Duralraj greeted by Hotel Ananda Bhavan proprietor Murugan. Venkatasubbu and Real Estate Murugan are also seen.

Scanned with CamScanner

## வாழ்த்து



தமிழ்நாடு வணிகர் சங்கங்கள் பேரமைப்பின் கடலூர் தலைவராக பொறுப்பேற்ற ஜி.ஆர்.கே. எஸ்டேட் நிர்வாக இயக்குனர் துரைராஜ், ஆட்சி மன்றக்குழு உறுப்பினரும், ஓட்டல் ஆனந்தபவன் உரிமையாளருமான நாராயணனுக்கு சால்வை அணிவித்து வாழ்த்தியபோது எடுத்த படம். அருகில் ஆனந்தபவன் வெங்கடசுப்பு, தேவி முருகன் ஆகியோர் உள்ளனர்.

தினதந்தி 9/11/19.



கடலூரில்

## வணிகர் சங்கங்களின் பேரமைப்பு உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி

கடலூர், நவ.9-

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்பம் வழங்கும் நிகழ்ச்சி கடலூரில் நடந்தது. நிகழ்ச்சிக்கு மண்டல தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் நிஸ்டர் அலி, பொருளாளர் தேவி முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் நகர தலைவர் ஜி.ஆர்.கே.குழுமம் துரைராஜ் கலந்து கொண்டு வியாபாரிகளுக்கு புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்பத்தை வழங்கினார். பின்னர் அவர் கூறுகையில், கடலூர் வர்த்தகம் கந்துவட்டியால் மிகப்பெரிய பாதிப்பை சந்தித்துள்ளது. இதற்கு மாற்றாக சிறு, நடுத்தர வியாபாரிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு வங்கிகள் கடனுதவி வழங்கலாம். ஆனாலும் கடன் தொகை திரும்ப வருமா என்ற சந்தேகத்தால் வங்கிகள் தயக்கம் காட்டி வருகின்றன. இந்த நிலையை போக்குவோம். வங்கிகள் சிறு வணிகர்களுக்கு முத்ரா உள்ளிட்ட கடன்களை வழங்கினாலே கந்து வட்டி குறைந்து விடும் என்பதை வங்கிகளிடம் எடுத்துக் கூறி கடன் வழங்குவதற்காக ஏற்பாடுகளை செய்வோம் என்றார்.

இதில் பெட்ரோல் பங்க் உரிமையாளர் நலச்சங்க உரிமையாளர் வெங்கடேசன், தனியார் பஸ் அதிபர் சத்திய நாராயணன் மற்றும் பிரகாஷ், கார்த்திக், விக்னேஷ், சரவணன் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

தினமலர் 9/11/19

# வியாபாரிகளுக்கு வங்கி கடனுதவி

## வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் துரைராஜ் உறுதி

கடலூர், நவ. 9-

'வணிகர் சங்கங்களின் பேரமைப்பில் உறுப்பினராகும் வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி ஏற்பாடு செய்யப்படும் என' நகரத் தலைவர் துரைராஜ் கூறினார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பம் வழங்கும் நிகழ்ச்சி, கடலூர் ஜி.ஆர்.கே., எஸ்டேட் அலுவலகத்தில் நடந்தது.

மாவட்டத் தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். ஜி.ஆர்.கே., எஸ்டேட் நிர்வாக இயக்குனர், கடலூர் நகரத் தலைவருமான துரைராஜ், வியாபாரிகளுக்கு விண்ணப்பங்களை வழங்கினார்.



கடலூரில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் துரைராஜ், வியாபாரிகளுக்கு உறுப்பினர் சேர்க்கை படிவத்தை வழங்கினார். அருகில் மாவட்டத் தலைவர் சண்முகம், சுமங்கலி சில்க்ஸ் உரிமையாளர் நிஸ்டர் அலி.

சுமங்கலி சில்க்ஸ் உரிமையாளர் நிஸ்டர் அலி, தேவி ஓட்டல் முருகன், பஸ் அதிபர் சத்திய நாராயணன், பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்க வெங்கடேசன், சன் பிரைட் என்டர்பிரைசஸ் பிரகாஷ், கார்த்திக், விக்னேஷ், சரவணன் பங்கேற்றனர்.

பின், நகரத் தலைவர் துரைராஜ், கூறுகையில், 'கடலூர் நகரில் தினசரி 18 கோடி முதல், 20 கோடி ரூபாய் வரை வர்த்தகம் நடக்கிறது; மற்ற பகுதிகளைவிட இது குறைவு.

வங்கிகள், வியாபாரிகளுக்கு கடன் தர மறுக்கிறது. இதற்கு காரணம், வியாபாரிகள் கடனை திருப்பி செலுத்த உத்தரவாதம் இல்லாதது தான்.

இதனால், வியாபாரிகள் மூலதனம் செய்வது குறைகிறது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பில் உறுப்பினராகும் வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்க பேரமைப்பு சார்பில், ஏற்பாடு செய்யப்படும்' என்றார்.

Scanned with CamScanner

தினபூமி 15/11/19.

# கடலூர் மாவட்ட பிரிண்டர்ஸ் அசோசியேஷன் அச்சகத் தொழில் முனைவோருக்கான கருத்தரங்கம்

## மாவட்ட தலைவர் வெங்கடேசன் தலைமையில் நடந்தது



கடலூர் நவ.15

நிகழ்ச்சியினை சங்கர் முன்னிலை வகித்தார். பார்த்திபன் வரவேற்புரை நிகழ்த்தினார். தொழில் முனைவோருக்கான கருத்தரங்கத்தை பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் இளங்கோவன் துவக்கி வைத்தார்.

திட்டவிளக்கவுரை பஞ்சாப் நேஷனல் வங்கி சீனியர் மேலாளர் அசோக்குமார் நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியில் ஜிஆர் குழுமம் வர்த்தக சங்கங்களின் பேரமைப்பு கடலூர் நகர தலைவர் ஜி.ஆர். துரைராஜ், கடலூர் மாவட்ட பிரிண்டர்ஸ் அசோசியேஷன் சட்ட ஆலோசகர் சந்திரசேகரன், சிவா பிரிண்டர்ஸ் சென்னை சிவகுமார், கடலூர் பொறியாளர் சங்கம் பல்லவா சிவகுமார், கடலூர் வர்த்தக சங்கம் பொருளாளர் ஜெயபாலன், கடலூர் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மாவட்ட செயலாளர் தேசிங்குராஜன், கடலூர் தொழிலதிபர் சுமங்கலி குழுமம் நிஸ்தர் அலி, கடலூர் தேவி ஓட்டல் முருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் சிறந்த பிரிண்டர்ஸ் உரிமையாளர்களுக்கு சிறப்பு விருந்தினர் ஜிஆர் துரைராஜ் கேடயம் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து நம் நாட்டின் முதல் பாரத பிரதமர் ஜவகர்லால் நேரு பிறந்த நாள் கொண்டாடப்பட்டது அதனைத்தொடர்ந்து. நேரு பிறந்த நாளை நாம் அனைவரும் குழந்தைகள் தினமாக கொண்டாடி வருகிறோம் இன்றைய காலகட்டத்தில் தாய்மார்கள் நாடகத்திற்கும் செல்போனுக்கும் அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள் அதனை தவிர்த்து குழந்தைகளிடம் அன்பாக பழகி அவர்களுக்கு நேரங்கள் ஒதுக்கி அவர்களை நல்ல முறையில் பாதுகாத்து கொள்ளுங்கள் தினமும் இரண்டு மணி நேரமாவது குழந்தைகளிடம் சிரித்து விளையாடி பழகுங்கள் என்று இவ்விழாவில் மாவட்ட தலைவர் வெங்கடேசன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வீரபத்திரன், செல்வமணி, ராஜேந்திரன், மனோகரன், தேவராஜன், குணசேகரன், செல்லப்பன் உள்பட கடலூர் மாவட்ட பிரின்டர்ஸ் அசோசியேஷன் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

Scanned with CamScanner

தினமணி 29/11/2019



# கடலூர் நகரத் தலைவராக துரைராஜ் நியமனம்


## பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா வாழ்த்து

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கடலூர் தலைவராக துரைராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கடலூர் மாவட்ட ஆலோசனைக் கூட்டம் தேவி ஓட்டலில் நடைபெற்றது. கடலூர் மண்டலத் தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா கலந்து கொண்டார். ஒருங்கிணைப்பாளர் பட்டேல் வரவேற்றார்.

கடலூர் நகரத் தலைவராக ஜி.ஆர்.கே.எஸ்டேட் நிர்வாக இயக்குநர் துரைராஜ் நியமிக்கப்பட்டார். அவருக்கு சங்க நிர்வாகிகள், வியாபாரிகள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். விழாவில் ஆனந்தபவன் நாராயணன், தேவி ஓட்டல் முருகன், சுமங்கலி சில்க்ஸ் உரிமையாளர் நிஸ்தர் அலி, துரை ரவி, ஜி.ஆர்.ரங்கராஜன், தாமரைக்கண்ணன், மாவட்ட செயலாளர் வீரப்பன், மாநில இணைச் செயலாளர் தங்கராசு, மாநில துணைத் தலைவர் பழமலை, மாவட்ட துணைத் தலைவர் மணி, இணைச் செயலாளர் சுரேஷ், மாநில பி.ஆர்.ஓ. பாண்டியராஜன், பாண்டிச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் சிவசங்கர், செயலாளர் பாலு, நெல்லிக்குப்பம் நாசர், வடலூர் கலைச்செல்வன், கடலூர் உதயம் அப்பு, பிரகாஷ், சவுரிராஜன், வேல்முருகன், அரிகரன், ஆனந்தன் உட்பட மாவட்ட, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சரக்கு மற்றும் சேவை வரிகளில் உள்ள சட்ட திட்டங்களை வணிகர்களுக்கு தெளிவு படுத்தி, அபராதம் மற்றும் தண்டனைகளில் இருந்து காப்பது, வணிகர்கள் நிம்மதியாக வணிகம் செய்ய பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது, ஆன்லைன் மூலம் ஏற்படும் வணிக இழப்பை சரிசெய்ய புதிய குழு அமைப்பது, சிறு வணிகத்தை காப்பது என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ராமசாமி படையாட்சியார் மணி மண்டப நூலகத்திற்கு கம்ப்யூட்டர் வழங்க முடிவு



மஞ்சக்குப்பத்தில் உள்ள தியாகி ராமசாமி படையாட்சியார் சிலைக்கு. தமிழ்நாடு வணிகர் பேரமைப்பின் தலைவர் துரைராஜ் மாலை அணிவித்தார். அருகில், மண்டல தலைவர் சண்முகம், ஆனந்த பவன் ஹோட்டல் உரிமையாளர் ராம்கி நாராயணன், சுமங்கலி நிஷ்டர் அலி, தேவி ஓட்டல் முருகன்.

கடலூர், நவ. 29–


தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கடலூர் வணிகர் பேரமைப்பின் சார்பில், தியாகி ராமசாமி படையாட்சியார் மணி மண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கடலூர் பேரமைப்பின் தலைவர் துரைராஜ் மாலை அணிவித்தார். தமிழக பெட்ரோலிய வணிகர் சங்க மாநில தலைவர் முரளி, வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மண்டல தலைவர் சண்முகம், கடலூர் பேரமைப்பின் பொருளாளர் தேவி ஓட்டல் முருகன். ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் சுமங்கலி நிஷ்டர்அலி ,சீனுவாசன், பட்டேல், வெங்கடேசன், செல்லபாண்டியன், பிரகாஷ், பாலாஜி, சுப்ரமணியன், சாட் வெங்கடேசன், சூர்த்தியமூர்த்தி, ஓட்டல் ஆனந்தபவன் ராம்கி நாராயணன், சம்யுத்தா, அமுதவள்ளி, வள்ளிலாஸ் ரவிசங்கர், மோகன், சேகர், முதுநகர் ரமேஷ், விஸ்வேஸ்வரன், கனரா வங்கி ராமலிங்கம், கரூர் வைஸ்சியா வங்கி கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வணிகர் சங்க பேரமைப்பு சார்பில், மணி மண்டபத்தில் உள்ள நூலகத்திற்கு, 3 கம்ப்யூட்டர் வழங்கப்படும் என அதன் தலைவர் துரைராஜ் தெரிவித்தார்.

Scanned with CamScanner

தினத்தந்தி 29/11/2019




வணிகர் சங்க பேரமைப்பு சார்பில்

## எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் சிலைக்கு மரியாதை

கடலூர், நவ.29-
தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கடலூர் நகரம் சார்பில் மஞ்சக்குப்பம் மைதானத்தில் உள்ள எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் சிலைக்கு நகர தலைவர் ஜி.ஆர்.துரைராஜ் தலைமையில் மண்டல தலைவர் சண்முகம், நகர பொருளாளர் முருகன், தமிழ்நாடு பெட்ரோலிய வணிகர் சங்க மாநில தலைவர் முரளி ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் ஆனந்தபவன் ராம்கி நாராயணன், வெங்கடசுப்பு, ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் நிஷ்டர்அலி, சீனிவாசன், கே.டி.ஆர். எல். ஜெயச்சந்திரன், பட்டேல், அகர்வால் எழிலரசன், செல்லபாண்டியன், அபிராமி ஞானசுந்தர், வெங்கடேசன், பாலாஜி, சுப்பிரமணியன், சுபவள்ளிவிலாஸ் ரவிசங்கர், வங்கிமேலாளர்கள் ராமலிங்கம், கோபாலகிருஷ்ணன், அனைத்து மோட்டார் வாகன பழுது பார்ப்போர் சங்க தலைவர் நடராஜ் மற்றும் ஆட்டோ ஓட்டுனர் சங்க நிர்வாகிகள், வணிகர் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தினகரன் 30/11/19.

## ராமசாமி படையாட்சியார் சிலைக்கு மாலை அணிவிப்பு



கடலூர் மஞ்சக்குப்பத்தில் உள்ள தியாகி ராமசாமி படையாட்சியார் சிலைக்கு தமிழ்நாடு வணிகர் பேரமைப்பின் தலைவர் துரைராஜ் மாலை அணிவித்தார். அருகில் மண்டல தலைவர் சண்முகம், ஆனந்தபவன் ஓட்டல் உரிமையாளர் ராம்கி நாராயணன், தேவி ஓட்டல் முருகன், ஸ்ரீ வள்ளி விலாஸ் ஸ்ரீனிவாசன், சுமங்கலி சில்க்ஸ் நிஸ்டர் அலி, ரோட்டரி தலைவர் வெங்கடேசன், ஒருங்கிணைப்பாளர் பட்டேல் ஆகியோர் உள்ளனர்.

தினகரன் 17/12/19.

## ஆன் லைன் வர்த்தகத்தை கண்டித்து கடலூரில் வணிகர்கள் ஆர்ப்பாட்டம்



ஆன் லைன் வர்த்தகத்தை தடை செய்ய வலியுறுத்தி கடலூரில் வணிகர் சங்கங்களின் பேரமைப்பும் சேம்பர் ஆப் காமர்ஸும் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைவர் ஜி.ஆர் துரைராஜ், மண்டல தலைவர் சண்முகம், ஆனந்தபவன் ராம்கி நாராயணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சியில் முக்கிய பங்காற்றும் வணிகர்களை காப்பாற்ற ஆன் லைன் வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும், என்றார்.

ஆனந்தபவன் ஓட்டல் குரூப்ஸ் உரிமையாளர் ராம்கி நாராயணன், தேவி முருகன், மாநில இணை செயலாளர் தங்கராசு உள்பட பலர் கண்டன உரையாற்றினர்.


திருப்பாவை

திருவெம்பாவை

வையத்து வாழ்வீர்காள்... நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிப்பாடி
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம். மலரிட்டு நாம் முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்...

2

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போ(தும்) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர் ...


Scanned with CamScanner

தினமலர் 14/12/19

# ஆன்லைன் வர்த்தகமே வருவாய் இழப்பிற்கு காரணம்

## வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் குற்றச்சாட்டு

கடலூர், டிச. 18–

ஆன்லைன் வர்த்தகத்தை எதிர்த்து மாவட்ட வணிகர் சங்கங்கள் மற்றும் கடலூர் வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கடலூர் பழைய கலெக்டர் அலுவலகம் எதிரே நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மண்டல தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலர் வீரப்பன் முன்னிலை வகித்தார்.

பொருளாளர் தேவி ஓட்டல் முருகன், மாநில இணைச் செயலர் தங்கராசு, மாநில துணைத் தலைவர் பழமலை, ஓட்டல் ஆனந்தபவன் ராம்கி நாராயணன் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பங்கேற்ற கடலூர் வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் தலைவர் துரைராஜ் கூறியதாவது:

மத்திய அரசு வரி வருவாயில் 30 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் ஆன் லைன் வர்த்தகம் தான். ஆன்லைன் வர்த்தகத்தில் கொள்முதல் செய்யும் விலையிலும், வியாபாரிகள் கொள்முதல் செய்யும் விலையிலும் வித்தியாசம் உள்ளது.

நாங்கள் 100 ரூபாய்க்கு ஒரு பொருளை விற்பனை செய்தால், அதற்கான வரியை செலுத்துகிறோம். ஆனால் ஆன் லைன் வியாபாரத்தில் வரி செலுத்துவதில்லை. இதனால், ஆன் லைன் வர்த்தகத்தால் 30 சதவீதம் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

ஆன்லைன் வர்த்தகத்தை 3 மாதங்கள் நிறுத்தினால், அந்த மூன்று மாதங்களில் எங்களுக்கு 30 சதவீதம் விற்பனை வரும். அதிலிருந்து நாங்கள் அரசிற்கு வரி செலுத்தினால் வருவாய் இழப்பு சரிசெய்யப்படும்.

ஆன்லைன் வர்த்தகத்தை நிறுத்தினால் 30 சதவீதம் அரசின் கஜானாவிற்கு செல்லும் என்பது உறுதி. இவ்வாறு அவர் கூறினார்.



■ கடலூரில் ஆன்லைன் வணிகத்தை எதிர்த்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நகர தலைவர் துரைராஜ் தலைமையில் நடந்தது. அருகில், மாவட்ட தலைவர் சண்முகம், ஆனந்தபவன் ராம்கி நாராயணன், தேவி முருகன், முரளி.

தினமணி 14/12/19

### இணையவழி வர்த்தகத்துக்கு எதிர்ப்பு

# வணிகர் சங்கப் பேரமைப்பினர் ஆர்ப்பாட்டம்

கடலூர், டிச. 17: இணையவழி (ஆன்-லைன்) வர்த்தகத்துக்கு தடை விதிக்கக் கோரி கடலூரில் வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு பேரமைப்பின் மாவட்டத் தலைவர் டி.சண்முகம் தலைமை வகித்தார். பேரமைப்பு மற்றும் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் தேவிமுருகன், நா.செல்லப்பாண்டியன், ஜெ.ராமலிங்கம், ராம்கி நாராயணன், இரா.முத்துக்குமரனார், தீபன் சக்கரவர்த்தி, முரளி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கடலூர் பேரமைப்புத் தலைவர் ஜி.ஆர்.துரைராஜ் சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

இணையவழி வர்த்தகத்தால் கடைகளில் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்படுவதால் அதற்கு தடை விதிக்க வேண்டும். ஜிஎஸ்டி வரி வசூல் 30 சதவீதம் வரை குறைந்துள்ளதாகவும், எனவே, வரியை உயர்த்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. வரி வருவாய் குறைவுக்கு காரணம் இணையவழி வர்த்தகம்தான். இணையவழி வர்த்தகத்துக்கு 3 மாதங்களுக்கு தடை விதித்தாலே வரி வசூலை தெரிந்துகொள்ள முடியும்.

இணையவழி வர்த்தகர்கள் பொருள்களின் கொள்முதல் விலையை மிகவும் குறைத்து வாங்குவதால் வரி இழப்பு ஏற்படுகிறது. நாளடைவில் இவர்கள் சாதாரண வணிகர்களை ஒழித்துவிட்டு அவர்கள் மட்டுமே முழுவதும் ஆதிக்கம் செலுத்துவர். இது பொதுமக்களை வரும் காலங்களில் மிகவும் பாதிக்கும். எனவே, இணையவழி வர்த்தகத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்றார் அவர்.



கடலூரில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர்.

Scanned with CamScanner

தினத்தந்தி 17/12/19



கடலூரில் வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காட்சி.

ஆன்லைன் வர்த்தகத்தை எதிர்த்து

# கடலூரில், வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர் ஆர்ப்பாட்டம்

கடலூர், டிச.18-

ஆன்லைன் வர்த்தகத்தை எதிர்த்து கடலூரில், வணிகர் சங்கங்களின் பேரமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## ஆர்ப்பாட்டம்

இந்திய தொழில் வணிகத்தை சீரழிக்கும் ஆன்லைன் வர்த்தகத்தை எதிர்த்து கடலூர் மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் கடலூர் பழைய கலெக்டர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு மண்டல தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் வீரப்பன் முன்னிலை வகித்தார்.

நகர தலைவர் ஜி.ஆர். துரைராஜ் கலந்து கொண்டு, ஆன்லைன் வர்த்தகத்தால் அரசுக்கு 30 சதவீத வரி இழப்பு ஏற்படுகிறது. இதை சரிசெய்ய 3 மாதங்களுக்கு ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்யுங்கள். அதன்பிறகு வியாபாரிகள் கொள்முதல், விற்பனை செய்யும் பொருட்கள் மூலம் அரசுக்கு வரி வருவாய் கிடைக்கும். இதை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். ஆன்லைனில் செல்போன், சலவை எந்திரம் உள்ளிட்ட பொருட்கள் வாங்கினால், அதை பழுதுநீக்கி கொடுக்கக்கூடாது என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## தடை செய்ய வேண்டும்

ஆர்ப்பாட்டத்தில் ஓட்டல் ஆனந்தபவன் உரிமையாளர் ராம்கி நாராயணன், தேவி ஓட்டல் உரிமையாளர் முருகன், மாநில இணை செயலாளர் தங்கராசு, மாநில துணை தலைவர் பழமலை, ஓம் சிவசக்தி டைம்ஸ் உரிமையாளர் ரஜினிவிக்னேஷ், நிர்வாகிகள் சிவராமவீரப்பன், மாணிக்க செட்டியார், சந்திரகாசன், தனசேகரன், முனைவர் அலி, சண்முகம், மணி, தமிழ்முருகன், செல்லபாண்டியன், முத்துக்குமரன், பாலு, மோகன் உள்பட சிதம்பரம், குறிஞ்சிப்பாடி, வடலூர், விருத்தாசலம், திட்டக்குடி, காட்டுமன்னார்கோவில் உள்பட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். கடலூர் சேம்பர் ஆப் காமர்ஸ் வியாபாரிகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். முன்னதாக ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.






தினமலர் 11/1/2020

# கடலூர் சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் தேர்வு

கடலூர்,ஜன. 11-

கடலூர் வணிகர் சங்க பேரமைப்பின் முதல் ஆலோசனை கூட்டம் சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்தில் நடந்தது.

கடலூர் சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் துரைராஜ் தலைமை தாங்கினார். மண்டல தலைவர் சண்முகம், நகர தலைவர் துரைராஜ், செயலர் சீனுவாசன், பொருளாளர் தேவி முருகன், இணை செயலர் வெங்கடேசன், செல்ல பாண்டியன், வீனஸ் சேகர், பாலாஜி, ராஜாத்தி அயூப், சன்பிரைட் பிரகாஷ், முதுநகர் சதிஷ், சவுபாராசன், ஆனந்த் கலந்து கொண்டனர்.

துணை தலைவராக பட்டேல், செயலாளராக வள்ளி விலாஸ் சீனுவாசன், இணை செயலாளர்களாக பெட்ரோல் பங்க் வெங்கடேசன், சுகந்தி மளிகை செல்ல பாண்டியன், கடலூர் நகர ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணா டைல்ஸ் தமிழ்முருகன் ஆகியோர் நியமிக்கப் பட்டனர்.

கூட்டத்தில், முதுநகர், சிப்காட், இம்பீரில் ரோடு, வண்டிப்பாளையம், திருவந்திபுரம், பாதிரிக்குப்பம், கூத்தப்பாக்கம், திருப்பாதிரிப்புலியூர், கம்பியம்பேட்டை, கோண்டூர், சாவடி, செம்மண்டலம், ஆல்பேட்டை, மஞ்சக்குப்பம், ரெட்டிச்சாவடி, தாழங்குடா, உப்பலவாடி, பாரதிரோடு, புதுப்பாளையம், வண்ணாரப்பாளையம், செல்லங்குப்பம், பச்சையாங்குப்பம் ஆகிய பகுதிகளில் பகுதி செயலர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். சேம்பர் ஆப் காமர்ஸ்சில் உறுப்பினரானவர்கள், தகுதி, செயலாக்க அடிப்படையில் பொங்கலுக்கு முன்பு தேர்வு செய்யப்பட உள்ளனர். எனவே அனைவரும் உறுப்பினர்களாக வேண்டும்.

கடலூர் சேம்பர் ஆப் காமர்ஸ் அரசியல், மதம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு இயங்கும். கடலூர் பழைய கலெக்டர் அலுவலகத்தில் சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்திற்கு இடம் வாடகைக்கு கேட்டு மனு கொடுப்பது. உறுப்பினர்களின், வங்கி கடன், தனி நபர் கடன், வரவு, செலவு பிரச்னைகளுக்கு, சேம்பர் ஆப் காமர்ஸ் துணை நிற்கும். பொருட்காட்சி, இசை நிகழ்ச்சி, பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தி நிதி திரட்டப்படும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.


விழுப்புரம் மண்டலம், விழுப்
2018 – 19 நபார்டு
ஒப்பந்ததாரர்களிடமிருந்து

| வ. எண் | சங்கத்தின் பெயர் | பணி |
|---|---|---|


தினத்தந்தி 12/1/2020

# வணிகர் சங்க பேரமைப்பு ஆலோசனை கூட்டம்

கடலூர், ஜன.12-

கடலூர் வணிகர் சங்க பேரமைப்பின் ஆலோசனை கூட்டம் கடலூர் பீச்ரோட்டில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு தலைவர் ஜி.ஆர்.துரைராஜ் தலைமை தாங்கினார். மண்டல தலைவர் சண்முகம், நகர செயலாளர் சீனுவாசன், பொறுப்பாளர் முருகன், இணை செயலாளர் வெங்கடேசன், செல்லப்பாண்டியன், நிர்வாகிகள் வீனஸ்சேகர், பாலாஜி, அயுப்ராசாத்தி, சதிஷ், சவுபாராசன், ஆனந்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடலூர் மாவட்ட பழைய கலெக்டர் அலுவலகத்தில் வணிகர்சங்க பேரமைப்புக்கு அலுவலகம் வாடகைக்கு கேட்டு மாவட்ட கலெக்டரிடம் விண்ணப்பம் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக கடலூர் வணிகர் சங்க பேரமைப்பின் துணை தலைவராக ஜே.ஏ.பட்டேல், செயலாளராக சீனுவாசன், இணை செயலாளர்களாக வெங்கடேசன், செல்லப்பாண்டியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கலைக்குட்டி முருகேசன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

Scanned with CamScanner

தினகரன் 14/1/2020

## வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கூட்டம்

கடலூர், ஜன. 13: கடலூரில் வணிகர் சங்கங்களின் பேரமைப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கடலூர் நகர தலைவர் ஜிஆர்கே. துரைராஜ் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் பட்டேல், இணைச் செயலாளர்கள் வெங்கடேசன், செல்லபாண்டியன் முன்னிலை வகித்தனர். செயலாளர் சீனிவாசன் வரவேற்றார்.

மண்டலதலைவர் சண்முகம், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். கூட்டத்தில், வணிகர் சங்கங்களின் பேரமைப்பில் உறுப்பினர் சேர்க்கை செய்வது. பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நலனுக்காக குடிநீர் வழங்கும் வாகனம் செயல்படுத்துவது. வணிகர்களின் நலனுக்காக அவர்களின் பாதுகாப்புக்காகவும் உறுதுணையாக செயல்படுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், நிர்வாகிகள் வீனஸ்சேகர், பாலாஜி, ஐயூப், சதீஷ், ஆனந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர். பொருளாளர் முருகன் நன்றி கூறினார்.

தினமலர் 28/1/2020

## கடையடைப்பு போராட்டத்தில் வணிகர் சங்க பேரமைப்பு பங்கேற்காது: துரைராஜ்

28-1-2020

கடலூர், ஜன. 28–

கடலூரில் நகராட்சி வாடகைதாரர்கள் கூட்டமைப்பு, இன்று நடத்தும் கடையடைப்பு போராட்டத்தில், வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பங்கேற்காது என, பேரமைப்பு கிளை தலைவர் துரை ராஜ் கூறினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கடலூரில் நகராட்சி வாடகைதாரர்கள் கூட்டமைப்பு சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (28ம் தேதி) கடையடைப்பு போராட்டம் நடக்கிறது. இதில், கடலூர் வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பங்கேற்காது. வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் வழக்கம் போல் கடைகளை திறந்து வைப்பர்.

வரி தொடர்பாக அரசு, அதிகாரிகளிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

வரி உயர்வு குறித்தும், கடைகளுக்கு சீல் வைக்கக் கூடாது என்பது குறித்தும், அமைச்சர் சம்பத், கலெக்டர் அன்புச்செல்வன் ஆகியோருக்கு மனு அளிக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

எனவே, வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் வழக்கம் போல் கடைகளை திறந்து வைக்க வேண்டும்.

இவ்வாறு, அறிக்கையில், கூறப்பட்டுள்ளது.

தினமலர் 1/2/2020

## வியாபாரிகளுக்கு நிழற்குடை வணிகர் சங்க பேரமைப்பு வழங்கல்



கடலூர் முதுநகரில் சாலையோர சிறு வியாபாரிகளுக்கு, வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நகர தலைவர் துரைராஜ் நிழற்குடை வழங்கினார்.

கடலூர், பிப். 1–

சாலையோர சிறு வியாபாரிகளுக்கு நிழற்குடைகளை, வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் துரை ராஜ் வழங்கினார்.

கடலூரார் நகரில் சாலையோரங்களில் வியாபாரம் செய்பவர்களுக்கு உதவிடும் வகையில், நிழற்குடை வழங்க வணிகர் சங்கங்களின் பேரமைப்பு முடிவு செய்தது.

அதன்படி, கடலூர் முதுநகர், பச்சையாங்குப்பம், உழவர் சந்தை, மஞ்சக்குப்பம், பாதிரிக்குப்பம், சாவடி, வண்ணாரப்பாளையம், தேவனாம்பட்டிணம் உட்பட பல்வேறு இடங்களில் சாலையோரம் கடை வைத்துள்ள வயது முதிர்ந்த வியாபாரிகளுக்கு நிழற்குடைகள் நேற்று, வழங்கப்பட்டது.

வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கடலூர் நகர தலைவர் துரை ராஜ், வியாபாரிகளுக்கு நிழற்குடைகள் வழங்கினார்.

மண்டல தலைவர் சண்முகம், துணை தலைவர் பட்டேல், பொருளாளர் முருகன், தாமரைக்கண்ணன், பகுதி செயலர் சன்பிரைட் பிரகாஷ் முன்னிலை வகித்தனர்.

வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

Scanned with CamScanner